# இழந்ததை பெற! பெற்றதை இழக்காமலிருக்க!

# ஒன்றிணைவோம் வாரீர்,

அன்பான மின்வாரிய ஊழியர்களே, பொறியாளர்களே! அலுவலர்களே!

வணக்கம்

தமிழக அரசு நிதிநிலையை காரணம் காண்பித்து அரசின் பொதுத்துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலவில்லை என கூறி நிதி நிலைமை சரியான பிறகு பரிசீலிக்கப்படும் என அறிவித்திருந்தது. மேலும் நஷ்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அரசு ஊழியருக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை வழங்கக்கூடாது என அறிவித்திருந்தது.

**வாரிய உத்தரவு-2 -12.04.2022-ஐ திரும்ப பெறுக!**

இதனையடுத்து தமிழக மின்சார வாரியம் வாரிய ஆணை 2 நாள் 12.04.2022-ன் மூலம் மின்சார வாரிய பணியாளர்கள் இதுவரை பெற்றுவந்த பஞ்சப்படி, வீட்டுகடன், வாகனக்கடன், கல்விக்கடன், உள்ளிட்ட சலுகைகளை தொடர்ந்து வழங்க இயலாது என்றும், பஞ்சப்படியை தமிழக அரசு தனது ஊழியர்களுக்கு அறிவித்த பின்பு மின்சார வாரியம் தனது பணியாளர்களுக்கு வழங்குவதற்கு தமிழக அரசின் அனுமதி பெற்ற பின்பு தான் வழங்க இயலும் என தற்போது வாரிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

மின்வாரியத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகஅரசு பஞ்சப்படி சம்மந்தமாக அரசு ஆணை வெளியிட்ட பின்பு மின்சார வாரியம் தனது ஊழியர்களுக்கு வழங்கி வந்த நடைமுறையும் முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராகவும் மீறப்பட்டுள்ளது.

கடந்த அரசு ஆணை எண் 27 நாள் 21.01.2002-ன்படி அதாவது 20 ஆண்டுகளுக்கு முன்பு அரசு வெளியிட்ட வழிகாட்டுதலை கொண்டு தற்போது வாரிய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு உள்ளதாக வாரிய உத்தரவு வாரிய ஆணை 2 நாள் 12.04.2022-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜனவரி 2022-லிருந்து வழங்க வேண்டிய மூன்று சதவீத பஞ்சப்படியும் சரண்டர் விடுப்பும் பறிக்கப்பட்டுள்ளது. வாரியம் மேற்கண்ட உத்தரவை திரும்ப பெறுவதோடு அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும்.

**முத்தரப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திடுக!**

மின்வாரியம் பொதுத்துறையாக செயல்பட்டுவரும் நிலையில் ஊழியர்களின் பணி நிலைமை மற்றும் ஊதிய திருத்தம் முறைப்படுத்துகின்ற வகையில் தொழிற்தகராறு சட்டம் 1947-ன்படி இருதரப்பு, முத்தரப்பு ஒப்பந்தங்கள் மூலம் முறைப்படுத்தப்பட்டு வருவதை மின்வாரிய நிர்வாகம் கவனத்தில் கொள்ளவில்லை.

அரசு ஆணை எண் 100 தொடர்பாக தொழிற்சங்கம் தொடுத்த வழக்கில் மின்வாரிய நிர்வாகம் ஊழியர்களின் பணி நிலைமையில் மாற்றம், ஊதியம், ஓய்வூதியம், பஞ்சப்படி உள்ளிட்ட அனைத்து சலுகைகளையும் பாதுகாப்போம் என பதிவு செய்த பிரமானபத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததை மின்வாரிய நிர்வாகம் மதித்து தமிழக அரசின் உத்தரவாதத்துடன் கூடிய முத்தரப்பு ஒப்பந்தம் காணப்பட வேண்டும்

**காலிப்பணி இடங்களை நிரப்பிடுக!**

மின்வாரியத்தில் 52,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ள நிலையில் கடந்த ஐந்தாண்டுகளாக கேங்மேன் பதவியைத்தவிர வேறு எந்த பதவியும் நிரப்பப்படவில்லை. கணக்கீட்டு பிரிவில் மட்டும் 4000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்களும், களப்பிரிவில் பிரிவு பொறியாளர்

உட்பட 35,000 பதவிகள் காலிப்பணி இடங்களாக உள்ளதை மின்வாரிய நிர்வாகம் கண்டு கொள்வதில்லை. கூடுதல் பணிச்சுமையோடு ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். தமிழக அரசின் முதன்மை நிறுவனமாக இருக்க வேண்டிய மின்வாரிய நிர்வாகம், காலிப்பணி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டுவது தான் பணியாளர்களின் எதிர்பார்ப்பு. மின்வாரிய உத்தரவு 2-ல் கூட புதிய பதவிகளை நிரப்பிடுகின்ற பொழுது அதற்கு சமமான பதவிகளை கண்டறிந்து ஒழிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளதை நிர்வாகம் திரும்பப்பெற வேண்டும்.

**ஊதிய உயர்வு**

மின்வாரிய பணியாளர்களுக்கு கடந்த 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பாக அமைக்கப்பட்ட குழு ஒருமுறை கூடதொழிற்சங்கங்களை அழைத்து பேச தயாரில்லை. கொரானா தொற்றுநோய் காலத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்களை பலிகொடுத்து தடையில்லாத மின்சாரத்தை வழங்கியவர்கள் மின்வாரிய பணியாளர்களே. எனவே ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனடியாக துவங்கி தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில் ஒப்பந்தம் காணப்பட வேண்டும்.

**RE DIPLOYMENT**

தற்போதைய மின்வாரிய நிர்வாகம் புதிய பதவிகளுக்கு அனுமதிதராமல் மின்வாரிய நிர்வாகமே தன்னிச்சையாக முடிவெடுத்து சில பொறுப்புகளை காலியாக்கி புதிய பொறுப்புகளுக்கு நியமனம் செய்வதை கைவிடுவதோடு வேலைபளு ஒப்பந்தத்தின் மூலம் உருவான புதிய பதவிகளுக்கு அனுமதியளிக்க வேண்டும். Re diployment முறையை கைவிட வேண்டும்.

**மின்வாரிய நஷ்டத்திற்கு யார் காரணம்!**

மின்வாரிய நிர்வாகம் தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்கிறது. மாநில மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் தொகைக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்வதாலும், மத்திய ஓழுங்குமுறை ஆணையம் தனியார் மின்சார விற்பனையாளரிடம் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ. 12/-மேல் விற்கக்கூடாது என உத்தரவிட்டும், பற்றாக்குறையை காரணம் காட்டி கூடுதல் விலை கொடுத்து வாங்கியதனால் அதிகப்படியான செலவினம் ஏற்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் நிர்வாகமும்,அரசும் தானே தவிர ஊழியர்களோ, பொறியாளர்களோ அல்ல.

கடந்த 2020-21-ம் ஆண்டில் மின் வாரியத்தின் மொத்த வருமானம் ரூ.63388.52 கோடி, ஆனால் செலவினமாக ரூ.76,795.84 கோடி ஏற்பட்டுள்ளது. மின்சாரத்தை தனியாரிடம் இருந்தும் மத்திய தொகுப்பின் மூலமும் மின்சாரத்தை கொள்முதல் செய்ததில் ஏற்பட்ட செலவு 47,987.89 கோடி, அதாவது மொத்த வருவாயில் 75.7 சதவீதம் மின்சார கொள்முதலுக்கு மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் கூடுதலாக தனியாரிடமிருந்து அதிகவிலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்தது அதிகம். மின்வாரியத்திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களில் முழுமையாக உற்பத்தி செய்தாலே இந்த செலவை சரிகட்ட முடியும். நீண்ட கால மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

நிதிச்சுமைக்கு ஒரு போதும் பணியாளர்கள் காரணம் அல்ல. 52,000 காலிப்பணி இடங்கள் இருந்தும் கூடுதல் சுமையோடு பணியாற்றும் பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வூதியர்களுக்கும் செலவு செய்த தொகை ரூ.9144.15 கோடி இது வருவாயில் 14.42 சதவீதமே. தமிழக அரசு மின்வாரிய பணியாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சலுகைகளை உரிமைகளை அளிக்க வேண்டும். மாறாக நிதிச்சுமையை காரணம் காட்டி பணியாளர் நலன்களில் கைவைப்பது அரசிற்கு அழகல்ல.

**எனவே தமிழக அரசின் தலையீட்டை வலியுறுத்தி 07.06.2022-ல் மண்டல தலைமை பொறியாளர் அலுவலகம் முன்பு நடைபெற உள்ள கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பங்கேற்போம்.வெற்றி பெறச்செய்வோம்.**

**தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு**

**............................ மண்டலம்**